## முதல்வரின் சீரிய சிந்தனையில் கொண்டுவரப்பட்டதுதான் ‘சுய சான்று’ திட்டம்!

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் ரூ.5000 கோடியில் திட்டங்கள்!

## சட்டப்பேரவையில் – வீட்டு வசதி வாரிய துறை மானியத்தில் அமைச்சர் சு.முத்துசாமி பதிலுரை!

**சென்னை, ஏப். 9 -**

**சட்டப்பேரவையில் வீட்டு வசதி வாரிய துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் சு.முத்துசாமி பதிலளித்து உரையாற்றுகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ரூபாய் 5000 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் வீட்டு வசதி வாரிய துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் சு.முத்துசாமி பதிலுரை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். அவை முன்னவர் உட்பட அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம். பேரவைத் துணைத் தலைவர், கொறடா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இனமான பேராசியர்களை நினைவுகூர்ந்து, வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

இன்றைக்கு நடந்திருக்கின்ற சில அறிவிப்புகள் முதலமைச்சர் அவர்கள், கோரிக்கை வைத்த ஒரு நிமிடத்திலேயே அந்தக் கோரிக்கையை ஏற்று, இவ்வளவு பெரிய பணியைச் செய்திருக்கிறார் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவையெல்லாம், நாங்கள் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதேபோன்று எதிர்க்கட்சி சட்டமன்றத் தலைவர் அவர்கள், இனிமேல் சட்டமன்ற நிகழ்ச்சி களில் கலந்துகொள்ள முடியாது என்று சொன்னபோது, அவர்கள் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு ஒரு ஜனநாயக முறைப்படி நம்முடைய சட்டமன்றம் நடக்க வேண்டும் என்று கருதிய (மேசையைத் தட்டும் ஒலி) அநேகமாக முதல் முதலமைச்சர் இப்படி சட்டமன்றத்திலே அறிவித்திருப்பது அவராகத்தான் இருப்பார்.

எனவே, அப்படிப்பட்ட முதல்வர் அவர்கள், எங்களுடைய துறையிலே பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக, மக்களுடைய முன்னேற்றத்திற்காக திட்டங்கள் அவர்களைச் சென்று சேர வேண்டுமென்பதிலே பெருத்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம், பின்னர் நான் சொல்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் இன்றைக்கு இங்கே பேசியபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பொருளாதார வளர்ச்சியில் நம்முடைய தமிழ்நாடுதான் 9.69 விழுக்காடு உயர்வு பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு இடம்பெற்றிருக்கிறது என்று ஒன்றிய அரசின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சொன்னார். யார் எதைப் பேசினாலும், நிச்சயமாக நம்முடைய அரசாங்கத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய பணியானது, ஒன்றிய அரசால்கூட மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பணிகளை அவர் செய்திருக்கிறார். குறிப்பாக, ஈரோட்டில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பலநூறு திட்டங்களைக் கொடுத்தது மட்டுமல்லாமல், அங்கே, நேரடியாக வந்து, அவற்றிற்கெல்லாம் அடிக்கல் நாட்டி, திறந்து வைத்து, பல்வேறு முன்னேற்றங்களை எங்களுடைய மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**36 கிலோ மீட்டர் மக்கள் கூட்டம்!**

19-12-2024 அன்று ஈரோடு வந்தார்கள். அப்போது அங்கு கடுமையான வெயில். மதியம்தான் வந்தார். மாலையில் நிகழ்ச்சி துவங்குவதாக திட்டமிடப்பட்டிருந்தது. மதியம் அவர் வந்தபோது, சுமார் 36 கிலோ மீட்டர் தொலைவிற்கும் மக்கள் கூட்டம். குறிப்பாக, தாய்மார்கள் அவ்வளவுபேர் நின்று மிகப் பெரிய வரவேற்பைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பார்த்த முதலமைச்சர் அவர்கள், இறங்கி, ஏறத்தாழ 5, 6 கிலோ மீட்டர் அளவிற்கு நடந்தே வந்து, அவர்களையெல்லாம் சந்தித்து, அவர்களிடம் மனுக்களைப் பெற்றதோடு மட்டுமல்லாமல், அன்றைக்கு மாலையில் நடந்த ஆய்வுக் கூட்டத்திலேயே அத்தனைக்கும் தீர்வைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்தார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இது மட்டுமல்ல, பல்வேறு திட்டங்களை தற்போது எங்களுக்காக, எங்களது மாவட்டத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் துறை தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளைச் சொல்லி, பல முன்னேற்றங்கள் வருவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். தற்போது பேசிய உறுப்பினர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் குறித்து சொன்னார்கள், காலை உணவுத் திட்டம் குறித்து சொன்னார்கள். உயர் கல்விக்குச் செல்கிற மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான திட்டங்களை நாம் சொல்லிக்கொண்டே இருக்கலாம். 36 கி.மீ. தூரத்திற்கு மக்கள் ஏன் வந்து நிற்கிறார்கள் என்பதற்குக் காரணம், அவர் ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொண்டு செய்கிற மிகப் பெரிய பணி என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

இதை நாங்கள் அரசியலுக்காகப் பேசவில்லை. நடைமுறையில் பார்ப்பதைப் பேசுகிறோம். ஈரோட்டில்தான் இவ்வளவு பெரிய கூட்டம்; வேறு எங்கும் இனி பார்க்க முடியாது; நம்முடைய மாவட்ட மக்கள் அந்தளவிற்குப் பெரியளவில் இருக்கிறார்கள் என்றுகூட நான் நினைத்தேன். பின்னர், அவர் சென்ற அத்தனை மாவட்டங்களிலும், மக்கள் கூட்டம் அதை மீறியதாகத்தான் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று முன்தினம் நீலகிரிக்குச் சென்றார். நீலகிரி மாவட்டத்தில் யாரும் அதிகம் வெளியில் வர மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் காலம் முதலே பொதுக் கூட்டம் என்றால்கூட 10 பேர்தான் உட்கார்ந்திருப்பார்கள். ஆனால், தற்போது அங்கும் மிகப் பெரிய கூட்டம் இருந்தது. அங்கு 2 மிகப் பெரிய கட்டடங்கள் இருந்தன. அவை முழுவதும் மக்களால் நிரம்பியிருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களெல்லாம் வேடிக்கைப் பார்ப்பதற்காக வரவில்லை; அவர்மீது இருக்கின்ற அன்பின் காரணமாக வந்தவர்கள். அந்த அன்பு எப்படி வந்ததென்றால், அவர் செய்கின்ற பணி; (மேசையைத் தட்டும் ஒலி) இரவு பகலாக உழைத்து மக்களுக்காகக் கொண்டு வருகின்ற திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் அந்த மக்களை அங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தல்!**

அது மட்டுமல்ல, ஈரோடு (கிழக்கு) தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள், உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் அவர்களை வேட்பாளராக அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அங்கு என்ன நிலைமை என்பதையும் அவர் ஆய்வு செய்தார். ஆய்வு செய்தபின், நீங்கள் சென்று பணிகளைக் கவனியுங்கள் என்று சொல்லிவிட்டார். யாரும் அங்கே வரவில்லை. யாரையும் அங்கே வர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். என்னை அழைத்துச் சொன்னபோதும்கூட, மைக் பிரச்சாரம் செய்து கொண்டிருக்க வேண்டாம்; வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, வாக்கு சேகரிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகள் என்னென்ன என்பதைத் தெரிந்து வந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் அதிகாரிகளிடம் இது குறித்து நாங்கள் சொல்ல முடியாது. முதலமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினால், நானும், வேட்பாளரும், எங்களோடு இருந்த நண்பர்களும் ஏறத்தாழ 140 கி.மீ. அளவிற்கு நடந்து சென்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 140 கி.மீ. போகும்போது, தாய்மார்கள், பெரியவர்கள் எங்களிடத்தில் கொடுத்த மனுக்களை எல்லாம் வைத்திருந்து, தேர்தல் முடிந்த பின்னர், அவற்றை அதிகாரிகளிடத்தில் கொடுத்து, அவற்றிற்கெல்லாம் தீர்வு கண்டிருக்கின்றோம்.

இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு தேர்தலிலே வெற்றிபெற வேண்டுமென்பது மட்டும் நோக்கமல்ல. அதைப் பயன்படுத்தி இந்த மக்களுக்கு இருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பதுதான் அடிப்படை நோக்கமாக அவருடைய எண்ணத்திலே இருந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணத்தால்தான் அங்கே பதிவான வாக்குகள் 1,56,657 திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வாக்குகள் 1,15,709 (மேசையைத் தட்டும் ஒலி) வித்தியாசம் 91,558. எனவே, அந்த மக்கள் இவ்வளவு தூரம் நம் பக்கம் இருப்பதற்குக் காரணம் என்னவென்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். நூலகத்தைப் பற்றியெல்லாம் நாம் பேசுகிறோம். ஏறத்தாழ 13, 14 ஆண்டுகாலத்திற்கு முன்பு நிர்வாகிகளை யெல்லாம் அழைத்தார், ‘இனிமேல் யாரும் சால்வை கொடுக்கக் கூடாது; பரிசுப் பொருளைக் கொடுக்கக் கூடாது; மாலை அணிவிக்கக் கூடாது; அதற்குப் பதிலாக புத்தகங்களாகக் கொடுங்கள்’ என்று சொன்னார். இலட்சக்கணக்கான புத்தகங்கள் அவர் கைக்கு வந்து சேர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இது எதிர்க்கட்சியாக இருக்கிறபோது,—அந்தப் புத்தகங்கள் அனைத்தையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற நூலகங்களுக்கு பரிசாக அவர் அனுப்பிக்கொண்டே இருந்தார். இன்றைக்கு மிகப்பெரிய அளவிலே மாணவர்களுக்கும், மக்களுக்கும் அது பயன்படுகிறது



என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, ஈரோட்டிலே அண்ணா, பெரியாருடைய சிலையை மாற்றி வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை. மிக மோசமான நிலையிலே இருந்தது. அதை வைப்பதற்காக நான் அவரிடம் சென்று கேட்டபோது, அவர் இரண்டு விஷயங்கள் சொன்னார். ஒன்று, அரசினுடைய அனுமதி வாங்கிக்கொண்டு செய்யுங்கள். ஏனெனில் நாம் எதிர்க்கட்சி. அதற்கடுத்து, அவர் தெரிவித்தது, இரண்டு பீடத்தைக் கட்டி சிலை வைத்துவிட்டால் பெருமையல்ல, கீழே ஒரு நூலகத்தை அமையுங்கள். அந்த நூலகம் காலையில் walking செல்கிறவர்கள் வந்து படிப்பதற்காக அல்ல, போட்டித் தேர்விலே கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகள் அங்கே படித்து முன்னேற வேண்டும். அதற்குப் பயனுடையதாக இருக்கட்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அப்படித்தான் அமைத்திருக்கிறோம். இன்றைக்கு எங்கெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய சிலை அமைக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நூலகக்ஙள் வந்தி ருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதெல்லாம் எதற்காக எதிர்க்கட்சியாக இருக்கிறபோதே அவர் யோசிக்கிறார் என்றால், இதெல்லாம் அந்த மக்களுடைய எதிர்காலத்தை மனதிலே வைத்துத்தான் செய்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, துணை முதலமைச்சர் அவர்களும் ஈரோடு வந்தார். பல திட்டங்களை நமக்காக துவக்கி வைத்தார்கள். அதுமட்டுமல்ல, இந்தத் துறையிலே இருக்கிற சில பிரச்சினைகளைக்கூட முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்துவிட்டு மொத்தமாக சில துறைகளைக் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்ற காரணத்தால் துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, அந்தப் பணிகளைச் செய்யச் சொன்னார். அந்தப் பணிகள் எல்லாம் மிகச் சிறப்பாக நடந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஈரோட்டிலே சிக்கய்ய நாயக்கர் என்ற ஒரு கல்லூரி. அது மிகப் பழமையான ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரியிலே 52 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தக் கல்லூரியை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமென்று அந்த நிர்வாகமே கேட்டுக்கொண்டது. 10 ஆண்டுகாலமாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அதற்காக முயற்சியை யாரும் செய்யவில்லை. ஆனால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடனேயே சட்டமன்றத்தில் ஒரு bill pass செய்து, அது நேராக கவர்னருக்குச் சென்று, அங்கிருந்து ஒன்றிய அரசிற்குச் சென்று, அங்கிருந்து வருவதற்கு ஏறத்தாழ 3 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. 6 மாத காலத்திலே முடிய வேண்டிய வேலை 3 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. நாங்கள் bill pass செய்யும்போதே முதலமைச்சர் அவர்களின் கேட்டோம் அந்தக் கல்லூரி போக ஏறத்தாழ ஒரு 40 ஏக்கர் நமக்கு இருக்கும். அதிலே நீங்கள் சில முன்னேற்றங்களைச் செய்து கொடுத்தால், அது ஈரோட்டினுடைய அடையாளமாக இருக்கும் என்று கேட்டேன். அந்த இடத்திலே நாங்கள் அமைக்க வேண்டி கேட்டது பெரிய ஒரு நூலகம். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துவக்கினார். கலைஞருடைய பெயரிலே நம்முடைய தளபதி அவர்கள் மதுரையிலே துவக்கினார்கள். அதேபோன்று ஒரு நூலகம் வர வேண்டுமென்பது எங்களுடைய ஆசை.

எனவே, அதை அவரிடத்திலே நான் சொன்னேன், அது வரட்டும், அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஈரோடு வந்தபோது அங்கே அறிவித்தார். கண்டிப்பாக அந்த நூலகம் அமைக்கப்படும். அதே நேரத்திலே மிகப்பெரிய ஒரு விளையாட்டரங்கம் அமைக்கப்படும், ஒரு IAS academy அமைக்கப்படும் என்று அங்கு அறிவித்துவிட்டு வந்தார்கள். அதோடுமட்டுமல்ல, துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி அதைத் தொடர்ந்து கண்காணித்து அதற்கான நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார். கட்சியினுடைய சார்பாகப் பார்த்தால்கூட, இளைஞரணி சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தொகுதியிலேயும் நூலகம் அமைக்க வேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல, விளையாட்டு மைதானம். Stadium அமைக்க வேண்டுமென்று சொல்லி ஒவ்வொரு தொகுதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டினுடைய முன்னேற்றம் வர வேண்டுமென்பதற்கு ஒவ்வொரு நாளும் அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை உங்களிடத்திலே நான் சொல்கிறேன். பொதுவான ஒரு எண்ணம் அவருக்கு எப்போதுமே. எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கொரோனா வந்தது. அந்த நேரத்திலே எங்களையெல்லாம் அழைத்தார்கள். அழைத்துச் சொன்னார் மிகக் கடுமையான சூழ்நிலை. அதுதான் எங்களுக்குத் தகவல் வருகிறது. எனவே, இந்த மக்களுக்கு நீங்கள் ஏதாவது செய்ய முடியும் என்றால் நேரடியாகச் சென்று உதவி செய்யுங்கள்.

சொல்லிவிட்டு 2 condition சொன்னார். ஒன்று, இதற்காக நாம் யாரிடமும் வசூல் செய்யக்கூடாது. உங்களுக்கென்னசக்தியோ அதைச் செய்யுங்கள், அதே நேரத்தில் இது கடினமான நேரம், இதில் கட்சியைப் பார்க்காதீர்கள், அத்தனை பேருக்கும் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை எங்களுடைய நண்பர்கள் அத்தனைபேரும் ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்தார்கள். இதெல்லாம் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது நடந்த சம்பவம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதே அப்படி இருந்தவர், இப்பொழுது ஆளுங்கட்சியாக வந்து முதலமைச்சராக ஆனபொழுது எவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்வார் என்பதற்கு ஓர் அடையாமாகத்தான் நான் உங்களிடத்தில் இதனைச் சொல்ல விரும்புகிறேன்.

**ஒற்றைச் சாளர முறை!**

இந்தத் துறையின் சார்பாக, நகர ஊரமைப்புத் துறையின் சார்பாக, ஒற்றைச் சாளர முறையைப் பற்றி இங்கே பேசுகிறபொழுது சொன்னார். அது ஏறத்தாழ 2020ல் துவக்கப்பட்டிருந்தாலும்கூட அது வெற்றிகரமாகக் கொண்டுவரப்படவில்லை. முழுமையாகச் செயல்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தபின்னால்தான், அது முழுமையாக செயல்படுத்தப்பட்டு, ஏறத்தாழ 45 சதவிகிதம் கூடுதலான அனுமதியை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 45 சதவிகிதம் கூடுதலாக வந்தால் என்ன என்று நீங்கள் யோசிக்கலாம். நீங்கள் யோசியுங்கள். ஒருவேளை இந்த ஒற்றைச் சாளர முறை சுலபமாக இல்லாமல் இருந்திருந்தால், இந்த 45 சதவிகித மக்கள் அனுமதியில்லாமல் கட்டடத்தைக் கட்டியிருப்பார்கள். எனவே, இன்றைக்கு அனுமதி வாங்கி கட்டடத்தைக் கட்டுவதற்கு அடிப்படைக் காரணம் சுலபமாக இருக்கிற ஒற்றைச் சாளர முறைதான் அதற்குப் பயன்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில் இந்த அனுமதியைப் பெறுவதற்கு 180 நாட்களுக்கு மேல் ஆகும். இப்பொழுது சுமார் 70 நாட்களில் அவர்களுக்கு அனுமதி கிடைத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மனை வரன்முறையைப் பற்றி இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். அதற்கு கால அவகாசம் இன்னும் வேண்டுமென்று சொன்னார்கள். கண்டிப்பாக கால அவகாசத்தை உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை குறித்து முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகி றேன். இதுவரை ஏறத்தாழ 30,435 வரன்முறை செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். HACA (The Tamil Nadu Hill Areas Conservation Authority) பகுதியில் 77 வரன்முறை செய்து கொடுக்கப்பட்டுள்ளது HACAஐப் பற்றி பிறகு நான் சொல்கிறேன். ஏனென்றால், நம்முடைய உறுப்பினர் முனைவர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, கல்விக் கட்டடங்கள் அனுமதியில்லாமல் இருந்தன. ஏறத்தாழ 2,552 கல்விக் கட்டடங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் காலத்தில் வரன்முறை செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, பல கோரிக்கைகளைக் கொடுத்தார்கள். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்று வதற்கு நடவடிக்கை குறித்து முதலமைச்சர் அவர்களிடத்தில் பேசியபொழுது, பலவற்றிற்கு அவர் உடனடியாக அனுமதியை வழங்கினார்கள். பல இடங்களில், சாலைகள் மிகவும் சிறியதாக இருக்கின்றன, அதற்கு அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். அதுபோன்ற இடங்களில், தொடர் கட்டுமானம்continuous built up area என்ற வகையில், 22 இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த இடங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து, CC (Completion Certificate). கட்டட முடிவுச் சான்று கொடுப்பதில் எல்லோரும் போய் நின்று கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக 750 சதுர மீட்டருக்குள் இருக்கிற கட்டடங்களுக்கு, 3 kitchenக்குள் இருந்தால், 3 வீடுகள் இருந்தால் அவர்களுக்கு CC கொடுத்துவிடலாம் என்று இருந்தது. ஆனால், நிறுவனங்களில் இருப்பவர்கள் ஒரு 8 kitchen வரை இருந்தால் சரியாக இருக்கும் என்று வந்து கேட்டார்கள். அதனை முதலமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுத்தார்கள். இவையெல்லாம் நம்முடைய Policy Noteலேயே வந்திருக்கிறது. இதையெல்லாம் நினைவுகூர வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். அதேபோல, வணிகக் கட்டடத்திற்கு அதுவரை இல்லாமல் இருந்தது. இப்பொழுது ஏறத்தாழ 300 சதுர அடி இருக்கிற வணிகக் கட்டடத்திற்கு CC வாங்கவேண்டிய அவசியம் இல்லையென்று சுலபமாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அதிக உயரமில்லாத கட்டடங்கள் அதாவது Ground+3 போன்று இருக்கிற கட்டடங்கள், 12 மீட்டர் உயரம் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், நடைமுறையில் அதில் பல சிக்கல்கள் இருந்தன. அந்த சிக்கல்களையெல்லாம் வந்து சொன்னபொழுது, முதலமைச்சர் அவர்கள் அதை உயர்த்திக் கொடுங்கள் என்று சொன்னார்கள். எனவே, 12 மீட்டரிலிருந்து 14 மீட்டராக அது உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சாலைகளின் அகலம். நீங்கள் அப்பொழுதெல்லாம் பார்த்தீர்களென்றால், அடிக் கணக்கில் எடுப்பார்கள். அதற்குப் பிறகு Metric கணக்கு வந்தது, மீட்டர் கணக்கு வந்தது. எனவே, அதற்கும் இதற்கும் ஏறத்தாழ ஒரு அடி அல்லது 2 அடி தான் வித்தியாசம் இருக்கும். ஆனால் கட்டடம் கட்டுகிறபொழுது, மிகப்பெரிய சிரமங்களை அவர்கள் சந்திக்க வேண்டிய நிலை இருந்தது. இவை இரண்டையும் சமப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்து, இந்தப் பிரச்சினை அவர்களுக்கு முழுமையாக தீர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அணுகுசாலையைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே 15 அடி தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அணுகுசாலை என்பது முதலில் 7 மீட்டர் இருந்தது. இப்பொழுது முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கண்டிப்பாக 7 மீட்டர் தேவை, ஆனால் பேரூராட்சிகளில 6.5 மீட்டர் போதும், ஊராட்சிகளில் 6 மீட்டர் போதும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதனை அதற்கு மேல் குறைக்க முடியாது. காரணம் உங்களுக்குத் தெரியும் fire பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன.

**சுய சான்றுத் திட்டம்!**

ஆகவே, அந்த ஆபத்துகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தால்தான் இந்தளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரண மக்கள், அடித்தட்டில் இருக்கக் கூடிய மிகச் சாதாரண மக்கள் பயன்படுவதற்காக, முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில், சுய சான்றுத் திட்டம் என்றொரு மிக முக்கியமான திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சுய சான்றுத் திட்டம் என்பது, 2,500 சதுர அடி கொண்ட நிலப்பரப்பில் 3,500 சதுர அடி கொண்ட கட்டடம் கட்டுவதற்கு அனுமதி பெற அரசு அதிகாரிகளைச் சந்திக்க வேண்டிய அவசியமில்லை; அரசு அலுவலகங்களுக்கு வந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. சுயமாக அந்தச் சான்றை நீங்களே எடுத்து, onlineல் விண்ணப்பித்தால், உங்களுக்கு அனுமதி கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்து 8 மாத காலம் ஆகிறது. அந்தத் திட்டம் மிக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதையடுத்து, சுமார் 8 மாத காலத்தில் ஏறத்தாழ 71,128 பேர் அத்திட்டத்தின்கீழ் அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கிற நடைமுறை இருக்கிற காரணத்தினால்தான், மக்கள் சுலபமாக அனுமதியைப் பெற்று, குடியிருப்புகளைக் கட்டுகிறார்கள். இல்லையெனில், அவர்கள் permission இல்லாமல் கட்டியிருப்பார்கள். தற்போது, அவர்கள் அனுமதியைப் பெற்று, கட்டுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது HACA (The Tamil Nadu Hill Areas Conservation Authority) பற்றிச் சொன்னார்கள். HACAஐ பொறுத்தவரையில், மொத்தமாக பிரச்சினை இல்லையென்று சொல்லிவிட முடியாது. அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதில், நீதிமன்றம் வரும். ஆனாலும், இன்னும் அதனை ஒழுங்கு செய்ய வேண்டும் என்று ஓர் எண்ணம் அரசாங்கத்திற்கு வந்தது. எனவே, அந்த வகையில்,—முன்பு, HACA area என்பதை ஒரு கிராமத்தை எல்லையாக வைத்து வரையறை செய்திருப்பார்கள். ஒரு கிராமம் 10 கிலோ மீட்டரில் முடியும்; ஒரு கிராமம் 2 கிலோ மீட்டரில் முடியும். அதில் disparity இருந்தது. எனவே, அதை மாற்றி, தற்போது சர்வே நம்பர் அடிப்படையில் கொடுக்கலாம் என்று, முதல் முயற்சியாக கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான சர்வே பணிகள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பணிகள் ஏறத்தாழ முடியும் தருவாயில் இருக்கிறது. சர்வே நம்பர் அடிப்படையில் கொடுத்தால், ஏறத்தாழ 60 சதவிகிதம் இப்பொழுது இருக்கிற HACA area release ஆகும் என்பதை நாங்கள் உங்களுக்கு உத்தரவாதமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று தடையில்லாச் சான்று பெற வேண்டும். கட்டடங்கள் கட்ட அனுமதி உள்ளிட்டவற்றிற்கு தடையில்லாச் சான்றுகள் பெற வேண்டும். அவற்றை பல துறைகளிடமிருந்து பெற வேண்டும். முதலில் அதைப் பெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. தற்போது, அதனைத் தவிர்க்க என்ன செய்திருக்கிறோம் என்றால், சம்பந்தப்பட்டவக்ரள் apply செய்தால் 30 நாட்களில் அவர்களுக்கு தடையில்லாச் சான்று தானாக கிடைக்க வேண்டும். இல்லையென்றால், தடையில்லாச் சான்று தானாகக் கிடைத்ததாக 30 நாட்களுக்குப் பிறகு கணக்கெடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, தற்போது அவர்களுக்கு சான்று பெறுவது சுலபமாக்கப்பட்டி ருக்கிறது. இப்படி பல்வேறு திட்டங்கள் குறித்து நான் வரிசையாகச் சொல்ல முடியும். இந்தத் திட்டங்களெல்லாம் தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோன்று Master Plan. இதைப் பொறுத்தவரையில், தற்போது 7 சதவிகிதம் தான் planned areaவில் வருகிறது. அதனை ஏறத்தாழ 22 சதவிகிதமாக உயர்த்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை குறித்தெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் காலதாமதம் ஏற்படும். எனவே, அது மிகப்பெரிய ஒரு வளர்ச்சியை நம்முடைய தமிழ்நாட்டிற்குக் கொடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக, ஏறத்தாழ திராவிட முன்னேற்றக்

தொடர்ச்சி 14-ஆம் பக்கம்

## முதல்வரால் 40 ஆண்டு கால பிரச்சினைக்கு தீர்வு- 10,047 ஏக்கர் விடுவிக்கப்பட்டதால் 21 இலட்சம் பேர் பலன்!

## 2552 கல்விக் கட்டடங்களுக்கு வரன்முறை!

## 148 இடங்களில் 24,493 வீடுகள் அரசு அலுவலர்களுக்கான வாடகை குடியிருப்புகள்!